Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.90 of 2021**

Depositions of : PW 13 (LW 19)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.க.பிரசன்னா | தொழில் | : |
| தந்தை பெயர் | : | | முகவரி | : |
| வயது | : | | மாவட்டம் | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை=**

**நான் தற்போது ஓமநதூரார் அரசு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் பதிவாளராக பணி புரிகிறேன். கடந்த 24.11.2019 அன்று அதிகாலை சுமார் 2.25 மணியளவில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை கல்லூரியில் தீ காயப் பிரிவில் பணியில் இருந்த மருத்துவர் திருமதி.சங்கரி, திரு.வெங்டேசன் வ/30, என்ற நபர் தீ காயப்பிரிவில் அனுமதிக்கபட்டிருந்தவரை பரிசோதித்துள்ளார். அவருடைய மருத்துவ குறிப்பின் படி Alleged History of burns with Homicidal Indention by wife using Kerosene Following the fight with his wife at around 1.00 a.m. on 24.11.2019 at his residence என்று உள்ளது. அவருக்கு 83% தீக்காயங்கள் உடம்பில் ஏற்பட்டிருந்ததாக கண்டறிப்பட்டது. அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. 24.11.2019 அன்று காலை 7.45**

மணியளவில் 14 வது மெட்ரோ பாலிட்டன் மாஜிஸ்டிரேட் அவர்களால் மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த சமயத்தில் நோயாளி சுயநினைவுடன் இருந்தார் என்று மருத்துவர் சங்கரியால் சான்று வழங்கப்பட்டுள்ளது. நான் 25.11.2019 அன்று அதே பிரிவில் பணியில் இருந்த போது காலை 5.55 மணியளவில் அவர் தீக்காயம் மற்றும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இறந்துவிட்டார். இதனை பொருத்து நான் வழங்கிய இறப்பு அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். அவருடைய இறப்பிற்கான காரணம் 80% தீக்காயம் மற்றும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியாகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாணை இல்லை.

மறுவிசாரணை இல்லை

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.90 of 2021**

Depositions of : PW 14 (LW 18)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.ஜெயபிரதா | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | | முகவரி | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை=

நான் தற்போது அகர்வால் கண் மருத்துவமனையில் கருவிழி மேற்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 24.11.2019 அன்று அதிகாலை 2.00 மணியளவில் நான் கீழ்ப்பாகம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது 36 வயது மதிக்க தக்க திரு. வெங்கடேசன் என்பவரை திரு. தேன்தமிழ்செல்வன் என்கிற காவலர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்த போது வெங்கடேசன் முழு சுய நினைவுடன் இருந்தார். அவர் தன்னை பெயர் தெரியாத எரிபொருளை தனக்கு தெரிந்த நபர் தன் மீது ஊற்றி தீ பற்ற வைத்ததாக கூறினார். இந்த சம்பவம் அதிகாலை 1.00 மணியளவில் நடந்ததாக சொன்னார். அவருடைய முகம், கழுத்து, மார்பு, முதுகு, இரண்டு மேல் கைகள், முன் கைகள், இரண்டு தொடைகள் , கால்கள்

ஆகியவற்றில் தீக்காயங்கள் இருந்தன. அவருக்கு முதல் உதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக தீக்காய பிரிவில் அனுமதிக்கப்பட்டார். நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாணை இல்லை.

மறுவிசாரணை இல்லை

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.90 of 2021**

Depositions of : PW 15 (LW20)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **Dr.மணிகண்ட ராஜ்** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | | **முகவரி** | : | |
| **வயது** | : | | **மாவட்டம்** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை=**

**நான் தற்போது கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் மருத்துவ கல்லூரியில் உள்ள சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.11.2019 அன்று நான் அதே மருத்துவமனையில் அதே துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றியபோது டி10, திருமுல்லைவாயல் காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் படி குற்ற எண். 1268/2019 சம்மந்தப்பட்ட திரு க.வெங்கடேஷ், ஆண், வ/30, என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிததத்தினை 25.11.2019**

அன்று நன்பகல் 2.10 மணிக்கு பெற்றுகொண்டேன். பிரேதத்தை தலைமைகாவலர் 36010, திரு. மணிகண்டன் என்பவர் மூலம் அடையாளம் காட்டப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. பிரேதத்தின் காணப்பட்ட அங்கம் மச்ச அடையாளங்கள் பின்வருமாறு. 1. இடது பக்க முன் தொடையும், மேல் பகுதியில் ஒரு கருப்பு மச்சமும். 2. இடது பக்க பின் நெஞ்சு பகுதியின் கீழ் பகுதியில் ஒரு கருப்பு மச்சமும். பிரேத பரிசோதனையும் 25.11.2019 அன்று நன்பகல் 2.30 மணிக்கு தொடங்கினேன். பிரேதம் முழுவதும் மருத்துவமனை பஞ்சு துணியினால் சுத்தப்பட்டிருந்தது. சிறுநீரக வழிகுழாயில் கதீட்டர் இருந்தது. பிரேதமானவர் நல்ல உடல் தோற்றம் கொண்ட ஆண் நபர். பிரேதத்தின் உடல் முழுவதும் விரைப்பு தன்மை காணப்பட்டது. பிரேதத்தின் சுற்றி இருந்த மருத்துவமனை பஞ்சு துணியை பிரித்த போது மேல் தோல், அடிதோல் அளவிலான தீக்காயங்கள் ஆங்காங்கே முகம், அதை சுற்றியுள்ள இடங்களில் நல்ல தோல் காண்ப்பட்டது. இடது பக்க காதில் கீழ் பகுதி, கழுத்தின் முன் பகுதி, பின் பகுதி, வலது பகுதி, இடது பகுதி, நெஞ்சு மற்றும் வயிற்று பகுதியின் முன் பகுதி, பின் பகுதி, வலது பகுதி, இடது பகுதி அதை சுற்றி உள்ள இடங்களில் அங்காங்கே நல்ல தோல் காணப்பட்டது. வலது பக்க புட்டத்தின் வெளிபகுதியின் மேல் பகுதி அதை சுற்றியிள்ள இடங்களில் அங்காங்கே நல்ல தோல் காண்பட்டது. இரண்டு தொடை மற்றும் கால்களின் முன் பகுதி, பின் பகுதி, வலது பகுதி, இடது பகுதி அதை சுற்றியுள்ள இடங்களில் அங்காங்கே நல்ல தோல் காணப்பட்டன. இதை தவர உடலில் வேறு எங்கும் தீக்காயங்களோ அல்லது வேறு காயங்களோ இல்லை.

உச்சந்தலை, கபாலம், முளையின் உறைகள் அப்படியே நல்ல நிலையில் இருந்தன. முளை நீர் சுழ்ந்தும் ரத்த குழாய்கள் விரிவடைந்தும்

காணப்பட்டனா. அதை கூறாய்வு செய்து பார்த்த போது நெறுக்கி காணப்பட்டது. நாவடி எலும்பு அப்படியே நல்ல நிலையில் காணப்பட்டது. குரல்வளை குறுத்தெலும்பு மற்றும் மூச்சு குழாய் அப்படியே இருந்தது. அவைகளை கூறாய்வு செய்து பார்த்த போது நெறுக்கியும் நீர் சுழ்ந்தும் காணப்பட்டன. இருதயம் சரியான அளவில் இருந்தது. அதை கூறாய்வு செய்து பார்த்த போது. இருதய அறைகளில் உறைந்த ரத்தம் காணப்பட்டது. இருதய வால்வுகள் அப்படியே நல்ல நிலையில் காணப்பட்டன. இருதயத்தின் ரத்தக்குழாய்கள் ஆகியி கொரோனரி ரத்த குழாய்கள் அப்படியே நல்ல நிலையில் காணப்பட்டன. இருதயத்திற்கு வரக்கூடிய பெரிய ரத்த குழாய்களும் அப்படிய நல்ல நிலையில் காணப்பட்டன. நுரையீரல்கள் சரியான அளவில் இருந்தன. அவைகளை கூறாய்வு செய்து பார்த்தபோது நெருக்கியும், நீர் சுழ்ந்தும் காணப்பட்டன. வயிற்றை கூறாய்வு செய்து பார்த்த போது வயிற்றியில் 130 கிராம் பாதி ஜீரனம் ஆகிய சாப்பாட்டு துகள்கள் இருந்தன. எந்தவகையான தென்படும் வாடையும் இல்லை. வயிற்றின் சளி நெறுக்கி காணப்பட்டது. சிறுங்குடல் மற்றும் பெறுங்குடகளை கூறாய்வு செய்து பார்த்த போது மஞ்சள் நிற பாகு இருந்தது, அவைகளின் சளி நெறுக்கி கணப்பட்டன. கல்லீரல், மண்ணீரல், சறுநீரகங்கள் சரியான அளவில் இருந்தன, அவைகளை கூறாய்வு செய்து பார்த்த போது நெறுக்கி காணப்பட்டன. பித்தப்பை பித்தம் சுழ்ந்து காணப்பட்டது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. பிறப்புறுப்பு அப்படியே நல்ல நிலையில் காணப்பட்டது. இடுப்பு மற்றும் முதுகு தண்டு அப்படியே நல்லநிலையில் காணப்பட்டது.

உடல் உள் உறுப்புகளை ரசாயன பகுப்பாய்விற்காக சென்னை தடய அறிவியல் நிபுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரேத பரிசோதனை 25.11.2019 அன்று மாலை 3.45 மணிக்கு முடிவடைந்தது. பிரேதமானவர்

25.11.2019 காலை 5.55 மணிக்கு இறந்திருந்தார். தடையவியல் அறிவியல் அறிக்கை TOX.H.No.3510/2019, dated 16.12.2019 என்கின்ற அறிகை எங்கள் துறைக்கு 01.02.2020 அன்று பெறப்பட்டது. அந்த அறிக்கையில் சம்மந்தப்பட்ட இறந்த நபர் மதுவோ அல்லது விசமோ அருந்தியதற்கான ஆதாரம் எதுவும் தென்படவில்லை என்று வழங்கப்பட்டது.

இறப்பிற்கான காரணம் – உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டதால் அதிர்வு ஏற்ப்பட்டு உயிர் பிரிந்திருக்க கூடும் என்று எனது அறிக்கையில் கருத்து வழங்கியுள்ளேன். நான் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாணை இல்லை.

மறுவிசாரணை இல்லை